**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.03/2025** |
| Deposition of witness | : | P.W.5 |
| Name | : | அம்மைநாதன் |
| Father's /Husband Name | : | அர்ஜுனன் |
| Village | : | அட்டமங்கலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 72 |
| Occupation | : | விவசாயி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 20th day of June 2025.
A1 present. A2 absent. petition under section 355 BNSS filed. Allowed. A3 produced from Judicial Custody.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது அட்டமங்கலத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **எனது இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 08.10.2023 ம் தேதி காலை சுமார் 08.30 மணியளவில் அட்டமங்கலம் குடியானத்தெருவில் நாகவள்ளி என்பவர் வீட்டில் நடந்த நகை திருட்டு கேஸ் சம்மந்தமாக குடவாசல் போலீசார் வந்து விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக நானும் லெட்சுமிகாந்தன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் உள்ள விபரங்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த கையொப்பத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்றால் சரியல்ல. நான் அ.சா.1 வீட்டின் எதிரில் வசித்து வருவதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த

**வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.**

**மறுவிசாரணை - இல்லை**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.06.20 12:36:24 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.